உ

சிவமயம்



தெல்லியூரை பிறப்பிடமாகவும், குருமன்காடு வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி பராசக்தி முருகையா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவுச் சுடர்

11.10.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



தெல்லியூரை பிறப்பிடமாகவும், குருமன்காடு
வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

# அமரர்
# திருமதி பராசக்தி முருகையா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த
நினைவுச்சுடர்

11.10.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்







அன்புக்கு அணிகலனாய்

பாசத்தின் இருப்பிடமாய்

பொறுமையின் பொக்கிஷமாயிருந்து

எம்மை அன்புடனும் பாசத்துடனும்

வளர்த்து எமது ஒளிமயமான

வாழ்விற்கு பாத்திரமான எமது

அன்பு அம்மாவின் பாதக் கமலங்களில்

இம் மலரை காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.



இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ம் நாள் நினைவஞ்சலி



| தாயின் மடியில் | இறைவன் மடியில் |
|---|---|
| 25 | 11 |
| 04 | 09 |
| 1928 | 2007 |

அமரர்

## திருமதி. பராசத்தி முருகையா

**திதிவெண்பா**

பொங்கும் ஆவணித் திங்களாம் நாள் பதினொன்றில்
மங்கும் ஆவணி அமாவாசை தன்னில்
மங்கை பராசக்தி மண் விட்டு ஏகி
சங்கரன் தாள் சேர்ந்தாரே சுகம் காண.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

**விநாயகர் துதி**

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

**தேவாரம்**

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல் தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடரினுள் அடக்கிய வேதியனே
இதுவோ எமை யாளுமா றீ
வதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுன தின்னருள்
ஆவடுதுறை யரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி, உன் ஒளி பெருக்கி
உலப்பு இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெருமானே!
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே!

## திருவிசைப்பா

ஒளி வளர் விளக்கேயுலப் பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின்றிரண் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுகன் - அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியிலுறைபவ
கற்பக மெனவினை - கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மற்பொரு திரள்புய - மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு - பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய - முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த - அதிதீரா
அத்துய ரது கொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை - இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் - பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகல கலா வல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்
தாகவுண்டார்க்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே
சகல கலா வல்லியே

நாடும் பொருற் சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
கனதனக் குன்றுமைம் பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு

தார்ந்துன் னருட் கடலிற்

குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ

லோவுளங் கொண்டு தெள்ளித்

தெளிக்கும் பனுவற் புலவோர்

கவிமழை சிந்தக் கண்டு

களிக்குங் கலாப மயிலே

சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த

கல்வியுஞ் சொற் சுவை தோய்

வாக்கும் பெருக பணித் தருள்

வாய் வட நாற் கடலும்

தேர்க்குஞ் செந்தமிழ்ச் செல்வமுந்

தொண்டர் செந் நாவினின்று

காக்குங் கருணைக் கடலே

சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதத்தரு செய்ய பொற்
பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென்
னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவும் அகவும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியு
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதங் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே!

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்
வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால
முன்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்டு முயிரா மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலா வல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுன்
டேனும் விளம்பினுன் போற்
கண்கண்ட தெய்வமுள தோ
சகல கலா வல்லியே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி

### காப்பு

**நேரிசை வெண்பா**

**துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் ~ கதித்தோங்கும்**
**நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்**
**சஷ்டி கவசந் தனை.**

**குறள் வெண்பா**

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

**நிலைமண்டல ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுக் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கலென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிகை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரர ரரர
ரிஹண பவச ரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாருமிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற்றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறு றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோதனென்று
நுன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என்றலை வைத்துள் இணை யாகாக்க
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காகக்
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேலிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வையிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பரவசம் பொடி பட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புகழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஓட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தர்களெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷயங்கள் எளிதினில் லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தின் மாமலைஉறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரரா குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ள்நீங்க
எத்தனை குறைகள்எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தாங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(முற்றிற்று)

- *திருச்சிற்றம்பலம்* -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் பராசக்தி முருகையா அவர்களின் வாழ்வியல் நோக்கு.....

ஈழ மணித்திருநாட்டின் வடபால், மாவையம்பதியின் மருங்கில் ஞாலம் புகழ் அம்மன், துர்க்கை வடிவாகி அருளாட்சிபுரியும் பதியாய் அமைந்து பல் தொழில் வல்லுனர்களும், கற்றறிந்த அறிஞர்களும் செறிந்து வாழும் பதியாகி பிரசித்தமடைந்தது தெல்லியூர். நீர் வளமும் நில வளமும் செறிந்து கார்வளம் கொண்டு வடபால் கடலோசையுடன் தென்றல் வீசும் பதியுமிதுவே. இப் பதியில் அமரர்களான தம்பு தங்கம் தம்பதியினர்க்கு இரண்டாவது மகவாய் அமரர் பராசக்தி அவர்கள் 25ம் நாள் சித்திரை மாதம் 1928 ம் ஆண்டில் ஜனனித்தார். அன்னாரது உடன் பிறப்புகளாய் சரஸ்வதி தனபாலசிங்கம் ஆகியோர் அமைந்து பாசத்தை பரிமாறி இன்புற்று வாழ்ந்தார்.

அமரர் பராசக்தி முருகையா அவர்கள் 3 வது வயதில் தனது தாயாருடன் சிங்கப்பூர் சென்றார். பெற்றோர்களுடன் அங்கேயே தங்கி சென்ரூர் கொன்வென்ரில் கல்வியினை மிகச் சிறப்பாகக் கற்றுவந்தார். இரண்டாவது உலக மகாயுத்தம் ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது அன்னாருடைய கல்வி சிறிது தடைப்பட்டாலும் அவரின் ஆர்வம் மேலும் கல்வியை தொடர வழி சமைத்தது.

இவ்வாறு தனது ஆரம்ப வாழ்வையும் இளமை வாழ்வையும் சிங்கை மண்ணிலே சிறப்பாகக் கழித்து தனது இல்லற வாழ்வின் இணைவுக்காய் 1947 ம் ஆண்டளவில் இலங்கை மண்ணிற்கு திரும்பினார். அன்னார் தம் பண்பிற்கும் பாசத்திற்கும் ஏற்றால் போல் அமரர்களான வைரவி சேதுப்பிள்ளை தம்பதியினரின் புதல்வன் முருகையா அவர்களை கைப்பிடித்து இல்லற வாழ்வை நல்லறமாய் நடாத்தி இன்புற்றார்கள். அதன் சான்றுப் பகர்வாய் இரஞ்சினி (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்), சிறிஸ்கந்தராஜா (Ceycan Travels), அம்பிகா (சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர் நூலக சேவைகள், வவுனியா வளாகம்),சிறி ராஜ்குமார் (இலண்டன்) ஆகியோரை நன்மக்களாய் பெற்று அகமகிழ்ந்தார்கள்.

பிள்ளைகளையும் கடமை தவறாது காலக் கடனை உணர்ந்து கற்பித்து நற்றோர் ஆக்கி காலவோட்டத்தில் அவர்களிற்கு இல்லறத் துணையையும் தேடிக் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் நல் வாழ்வு கண்டு இன்புற்றார். அதன் படி மு.வீரகுலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்) யோகாம்பிகை , தி.விஜயகுமார் (பிராந்திய கணக்காளர் சேவாலங்கா மன்றம்), சகுந்தி (இலண்டன்) ஆகியோரை மருமக்களாகப் பெற்று அவர்களின் அன்பிலும் பண்பிலும் மனம் மகிழ்ந்தார். அது மட்டுமா பிரசன்னா(IBM), பிரஷாந்தன்(HSBC), பிருந்தாபன் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), வருண் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, நிரேஷ் (இலண்டன்) , கிறிஷானி (இலண்டன்) ஆகியோரை பேரப்பிள்ளைகளாகப் பெற்று அவர்களின் மழலை மொழியில் மனம் குளிர்ந்தார். பேரப்பிள்ளைகளும் படிப்படியாக கல்வியில் உத்தியோகத்தில் உயர்ந்து வருவது கண்டு பூரிப்படைந்தார். "பாட்டி" என்கின்ற அவர்களின் பாசமான இனிய அழைப்பை மனதில் வைத்து மகிழ்ந்தார்.

ஆனாலும் அன்னார்தம் கணவர் 1978 ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார் இவற்றையெல்லாம் கண்டுகளிக்க தன்னுடன் அவர் இல்லையே என்ற வேதனை அவருக்கு என்றும் இருந்தது. மன உறுதியுடன் குடும்பத்திற்கு ஓர் ஆணிவேராக நின்று நம்பிக்கை தந்து வாழ்ந்து வாழ வைத்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ம் ஆண்டில் இருந்து வவுனியாவில் அன்னார் தம் மகளுடன் வசித்து வந்தார். இயற்கை விதியின் பிரகாரம் பூரண வாழ்வு கண்டு படிப்படியாக வாழ்வின் ஒவ்வோர் நிலையையும் அனுபவித்து வாழ்ந்து 11ம் திகதி புரட்டாதி மாதம் 2007ம் ஆண்டு மாலை 2.45 மணியளவில் புண்ணிய ஆத்மாவாய் சங்கரன் பாதம் சென்று சேர்ந்தார்.

இழப்பு மனதுக்கு வேதனை தரும் ஒன்று தான். ஆனாலும் சில உண்மைகள் தவிர்க்க முடியாதவை. அந்த வகையில் அன்னாருடைய பிரிவும் இயற்கையின் வழியே நிகழ்ந்த ஒரு சோகமான பிரிவு என உணர்ந்து அன்னார் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக .

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பியின் அன்னை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துடன் சங்கமமாகிவிட்ட எனதருமை அம்பியின் அம்மாவினை மீண்டும் ஒரு முறை எண்ணிப்பார்க்கின்றேன்.

ஒரு நல்ல இல்லத்தரசியாக, இனிய சுபாவம் மிக்கவராக தந்தையை இழந்த தன்னுடைய குழந்தைகளுக்கு தந்தையாகவும் தாயாகவும் இருந்து அவர்களை சமூகத்தின் நற் பிரஜைகளாக நற்பண்புள்ள மக்களாக உருவாக்கிய நிறைவுடைய அன்னையாகத் திகழ்ந்தார் என்றால் மிகையல்ல. எல்லோருடனும் மலர்ந்த முகத்துடன் அளவளாவும் பண்பும், வீட்டிற்கு சென்றோர்க்கு விருந்தளிக்கும் பண்பும், வன் சொல் பேசாத அன்பான இனிமையான பேச்சும், என்றும் அன்னாரை ஒரு அன்பான தாயாராக உணர்ந்தோம்.

நான் அன்னாருடன் சுமார் 35 வருடங்களுக்கு மேலாகப் பழகியுள்ளேன். அவருடைய இந்த துயரமான பிரிவு சம்பவிக்க 2 மாதங்களிற்கு முன் சென்று சந்தித்தேன். கண்டவுடன் என்னை அடையாளம் கண்டு அன்புடன் அளவளாவினார். எம் உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மார்த்தமாய் இருந்தமையாலோ என்னவோ உடன் அடையாளம் கண்டு அன்பை பகிர்ந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது.

அன்னார் தனது இறுதிக் காலத்தை தனது மகளான அம்பியின் அரவணைப்பில் மிக இனிமையாகக் கழித்தார். ஆனாலும் போர்ச்சூழலால் தமது சொந்த மண்ணை விட்டு வவுனியாவிற்கு வந்து வாழ்ந்து கொண்டிருப்பது எல்லோரைப் போலவும் அன்னாருக்கும் மனதில் இடை இடையே ஆதங்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் ஒரு இல்லத்தரசியாக தனது கடமைகள் அனைத்தையும் நிறைவாக நிறைவு செய்து எல்லோர் மனதிலும் ஒரு அன்புத் தாயாக இடம் பிடித்து வாழ்வாங்கு வாழ்ந்து உடலளவில் மறைந்து விட்டார். அதற்கு எடுத்துக்காட்டாக அன்னாருடைய இறுதிக் கிரியைக்கு கடல் கடந்த நாடுகளில் இருந்தும் அன்னார் தம் பிள்ளைகள் வந்து தமது கவலைகளை கொட்டியதுடன் தம் தாய்க்கு செய்ய வேண்டிய இறுதிக்கடமைகளை திருப்தியுடன் செய்தது மனதுக்கு பெரிதும் திருப்தியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் அந்த அன்பு பிணைப்பையும் உணர்த்தியது. உண்மையில் இப்படியான ஆத்மாக்கள் இந்த மண்ணை விட்டு மறையும் போது மனது பாரமாகிறது. ஆனாலும் இது இயற்கை என்றாகிவிட்டது.

அவர் மறைந்தாலும் மனதுகளில் வாழ்ந்து எம்மை வாழ்த்திக் கொண்டும் ஆசீர்வதித்துக் கொண்டும் இருப்பார்.

அன்னார் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன். அன்னார் தம் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**



**திருமதி கலா சிவலிங்கம்**
**முகாமையாளர் மக்கள் வங்கி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மம்மாவிற்காக...

பாசமழை பொழிந்து பண்பதனை எமக்கூட்டி
நேர்வழியில் எமை வளர்த்த எம் நேசமிகு அம்மம்மாவே
ஏன் இந்தக் காலனிற்கு எம் இனிமை பொறுக்கவில்லை
பாசமிகு அம்மம்மாவே,
நீங்கள் இப் பேரமக்களை விட்டுப் பறந்தீரே.

இன்று ஏங்குகின்றோம் எங்கும் தேடுகின்றோம்
ஏன் இங்கு நீங்கள் இல்லை?
ஆசையுடன் எமை அரவணைத்த உங்கள்
நேசமுகம் அதை நாம் தொலைத்துவிட்டோம் ஆனாலும்
அறுக்கமாட்டோம் உங்கள் அன்பு வலையை
மறக்கமாட்டோம் உங்கள் அறிவுரையை.

- பேரப்பிள்ளைகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்த முகத்துடனே

வாசலிலே அமர்ந்து

வருபவரை வரவேற்று

உபசரித்து வழியனுப்பும்

உன் அன்பு வதனம்

வாடி விட்ட சேதி

மங்கிய மாலைப் பொழுதில்

காற்றினிலே வந்ததம்மா.

அம்மா!

நீ உந்தன் பிள்ளைகளுக்கு

மட்டுமல்ல - நம்

அனைவருக்கும் அம்மாதான்

இனிய கதை கூறி,

அகம் நோக்கி ஆறுதல் கூறி

துயரத்தில் பங்கு கொண்டு

எமை அரவணைத்த உன் கரங்கள்

இனி எம்மை அணைத்தெடுக்க

நீ இனிமேல் இல்லை

என்றெண்ணும் கணத்தில்

எம் நெஞ்சு வேகுதம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மனம் போலப் பூரித்த
உன் வாழ்வின் வசந்தங்களும்
நாமறிவோம் மகராணி
நீ மண்ணிலே நிறைவுற்று
விண்ணுக்குச் சென்றுவிட்டாய்.

சொர்க்கத்தில் நீ அங்கு
சுதந்திரமாய் சுற்றமுடன்
வீற்றிருக்கச் சித்தம்
தெளிந்துந்தன்
ஆத்ம சாந்திக்கு
அம்மன் காலடியில்
அம்மா நாம் இறைஞ்சுகிறோம்.

எம்மவளே நீ அங்கு
நிறைந்த பூரணத்துவம்
பெற்று என்றென்றும்
நித்திய சாந்தியுடன்
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**விமலா வேலுதாசன்**

**நூலகம், யாழ். பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Mrs. Parasakthy Murugaiah, a mother of grace!

The sad and sombre news of Ambika acca's amma's demise reached our ears on the morning, 12th of September 2007. We became poignantly retrospective for a while. Even now we couldn't believe our ears. She was personally known to us almost nearly a decade. In fact, she was our dear friend's mother. She was not only a mother to Ambika acca but for us also. We too affectionately called her 'amma'.

She was very kind, soft spoken, and tolerant, having very pleasant face with gracious smile, innocent and frank. She had many sterling qualities. Her face was always bright beaming like moonlight; whenever she saw us, it used to illuminate more. She never hurt anyone by her words; such a nice lady! I had never seen her face frowning. Even in her fragile and frail old-age, she seemed to be spick and span. She was very pious; she perused religious books like 'thevarams', and 'puranams' with great interest.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Whenever we visited Ambika acca's home, mostly we used to occupy ourselves with 'amma'; she shared everything with us like her own children. Those memories couldn't be erased from our mind. If we failed to visit her for sometime, she would inquire about our absence eagerly from Ambika acca.

"When I left for India, last time I visited her, while conversing, I just asked her, 'amma what is to tell Seelan?' She replied smilingly 'tell that I am fine' and she hugged me with profound affection. That was the last word I heard from her still echoing in my ears". But she was no more now. Tears roll down from our cheeks; we know very well that tears won't bring back the Dead.

That unfortunately we couldn't attend the funeral to give our last respects gnaws our heart. Most of the time, we used to be with her when she was alive but could not be with her at the last memorable minute. Our hearts silently weep.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We miss her a lot. The days which we spent with her were the beautiful memories engraved in our minds that cannot be faded away. Physically she might have disappeared from us but spiritually she lives with us till the end.

Let her soul rest in peace.

**Subajana & Jeyaseelan**
**Vavuniya Campus**

## MOTHER

M - MOTIVATOR

O - ONLYONE

T - TENDERLOVE

H - HEARTIEST

E - EXCEPTIONAL

R - RESPONSIBILITES



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

உயிராய் 25 ∴ 04 ∴ 1928



உடலாய் 11 ∴ 09 ∴ 2007

# திருமதி பராசக்தி முருகையா

வவுனியா வளாக சிரேஸ்ட பதவி நிலை உத்தியோகத்தர் (நூலக சேவை) திருமதி அம்பிகா விஜயகுமார் அவர்களின் அன்புத் தாயார் திருமதி பராசக்தி முருகையா அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் சங்கம்,**

**வவுனியா வளாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
25
∴
04
∴
1928



மறைவு
11
∴
09
∴
2007

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், குருமன்காடு, வவுனியாவில்

தற்காலிகமாக வசித்து வந்த

அமரர்

## திருமதி. பராசக்தி முருகையா

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் இருப்பிடமாய்

அன்பின் குலவிளக்காய் வாழ்ந்து எமையெல்லாம்

ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட

பாசமிகு எம் அன்னையே

உங்கள் செயலில் எதை மறப்பது?

ஒற்றுமையாய் வாழ்ந்து ஊரிலும் உறவிலும்

உயர்ந்து நின்றீர்கள்!

உங்கள் பிரிவால் சடமாகிக் கிடக்கின்றோம்.

கண்ணீருக்கும் விலை இல்லை என்பது

உம் பிரிவில்தான் தெரிகிறது....

படைத்தவன் அன்பு கொண்டு பறித்திட்டான்

நாம் பதைக்கின்றோம் உமையெண்ணி.

*அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*


சேவாலங்கா மன்றம்,

வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தாயார் திருமதி. பராசக்தி முருகையா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடனடியாக எமதில்லம் வந்து அல்லும் பகலுமாக வேண்டிய உதவிகள் செய்த சேவாலங்கா மன்ற ஊழியர்களுக்கும், வவுனியா வளாக ஊழியர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், நேரில் வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலை சாத்தி அஞ்சலி செய்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் பல்வேறு விதத்திலும் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும், அந்தியேட்டியிலும், வீட்டுக்கிருத்திய வைபவத்திலும்கலந்து கொண்ட அனைவருக்கும், இறுதிக் கிரியை, அந்தியேட்டிக்கிரியை, வீட்டுக்கிரியைகளை சிறப்பாக நடத்திய சிவாச்சாரியார்களுக்கும், இரங்கலுரை தந்துதவியவர்களுக்கும், அன்னார் நோயுற்று இருந்த சமயம் உதவிய வைத்திய அதிகாரிகளுக்கும், இம்மலரை அழகுற அச்சிட்டு உதவிய G.H Printers ற்கும் எமது இதயபூர்வமான நன்றிகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**திரு. திருமதி மு. வீரகுலசிங்கம்**

**திரு. திருமதி மு. சிறிஸ்கந்தராசா**

**திரு. திருமதி தி. விஜயகுமார்**

**திரு. திருமதி மு. சிறிராஜ்குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

G.H Printers.No.165A.Mannar Road.Vavuniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org